பக்கங்கள்: 06

காலைக்கதிர்
Kālaikkathir
மாலைப்பதிப்பு

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2051 ஐப்பசி 13 வெள்ளிக்கிழமை 30.10.2020 கதிர் 225

## குருநாகல் மாநகரில் எண்மருக்குத் தொற்று

குருநாகல் மாநகரசபை அதிகார பிரதேச எல்லைக்குள் 8 பேர் கொவிட் - 19 தொற்றால் பீடிக்கப்பட்டுள்ளனர்.

வில்கொட, வில்கொடவத்தை, உடவல்பொல மற்றும் இந்துல்கொடகந்த ஆகிய பகுதிகளிலேயே இவ்வாறு கொவிட் - 19 தொற்றுறுதியானவர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்

2

# ‘கொரோனா’வுக்கு ‘முடிவு’கட்ட யாழில் அதிரடி தீர்மானங்கள்

### மாவட்ட செயலக கூட்டத்தில் முடிவு

- ★ 50 பேருடன் வீட்டிலேயே திருமண நிகழ்வு
- ★ மரணச்சடங்கில் 25 பேர் மாத்திரம் அனுமதி
- ★ தனியார் கல்வி நிறுவனங்கள் இயங்கத் தடை
- ★ விளையாட்டுப் போட்டிகளும் மக்கள் சந்திப்புகளும் பொது நிகழ்வுகளும் ஒத்திவைப்பு
- ★ வெளி மாவட்டத்தில் இருந்து வருகை தருவோர் கிராம சேவகர்கள் ஊடாகப் பதிய வேண்டும்



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஒக்ரோபர் 30

யாழ்ப்பாணம் மாவட்டத்தின் தற்போதய கொரோனா நிலைமைகள் தொடர்பில் ஆராயும் மாவட்ட கொரோனா செயலணி விசேட கூட்டம் இன்று யாழ். மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது. இதன்போது முக்கிய தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன.

அதற்கமைய திருமணங்களை வீட்டில் நடத்த வேண்டும் எனவும், 50 பேருக்கு மேற்படாதவாறு நபர்கள் கலந்துகொள்ள வேண்டும் எனவும் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

2

## கரவெட்டியில் கொரோனாத் தொற்றால் 750 வழித்தடச் சேவைகள் இடைநிறுத்தம்

பருத்தித்துறை - யாழ்ப்பாணம் 750 வழித்தடச் சேவையில் ஈடுபடும் அனைத்து தனியார் பஸ்களும் சுகாதாரத் துறையினரின் அறிவுறுத்தலில் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

கரவெட்டி பிரதேசத்திலுள்ள இராஜகிராமத்தைச் சேர்ந்த பலர் தனியார் பஸ் சாரதிகள், நடத்துநர்களாகப் பணியாற்றும் நிலையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இராஜகிராமத்தைச் சேர்ந்த ஒருவருக்குக் கொரோனா வைரஸ் தொற்றுள்ளமை நேற்றுமுன்தினம் கண்டறியப்பட்டது.

பேலியகொட மீன் சந்தைக்குச் 6

2

## யாழ். மீன் சந்தை வியாரிகள் முப்பது பேருக்குச் சோதனை

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,ஒக்.31

யாழ்ப்பாணம் மாநகர சபை எல்லைப் பகுதிக்குள் உள்ள மீன் சந்தைகளில் விற்பனயில் ஈடுபடும் வியாபாரிகள் பி.சீ.ஆர். பரிசோதனைக்கு இன்று உட்படுத்தப்பட்டனர்.

பேலியகொடை மீன் சந்தையை தொடர்ந்து திருகோணமலை மீன் சந்தையில் விற்பனையில் ஈடுபட்ட வியாபாரிகள் சிலரில் கொரோனாத் தொற்று இனம் காணப்பட்டதனாலும்

2

## மேல் மாகாணத்தில் பொலிஸ் அதிகாரிகள் 43 பேருக்குக் கொரோனா

மேல் மாகாணத்தில் பொலிஸ் அதிகாரிகள் 43 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

குறித்த தொற்றாளர்களுடன் தொடர்புடைய 893 பேர் தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர் என்று மேல் மாகாணத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அலுவலகம் செய்தி வெளியிட்டுள்ளது.

## துப்பாக்கியும் வாளும் மட்டக்களப்பில் மீட்பு!!

மட்டக்களப்பு தலைமையகப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சவுக்கடி பகுதியில் இருந்து துப்பாக்கி ஒன்றும், வாள் ஒன்றும் மட்டக்களப்பு மாவட்ட விசேட குற்ற விசாரணைப் பிரினரால் மீட்கப்பட்டுள்ளன.

2

### மீண்டும் அடுத்த வாரம் முதல்

## யாழ். மருத்துவ பீடத்தில் பி.சி.ஆர். பரிசோதனை!

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்தில் அடுத்த வாரம் முதல் மீண்டும் கொரோனாத் தொற்றுத் தொடர்பான பி.சி.ஆர். பரிசோதனைகளை ஆரம்பிப்பதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது.

வடக்கில் கொரோனாத் தொற்றாளர் எண்ணிக்கை அதிகரித்துவரும் நிலையில், யாழ். போதனா வைத்தியசாலையில் மாத்திரம் பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுவதனால் முடிவுகளை வெளியிடுவதில் தாமதம் ஏற்பட்டிருந்தது. இதனைத் தவிர்க்கும் வகையில் யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்திலும் பி.சி.ஆர் பரிசோதனைகளை மேற்கொண்டு, முடிவுகளை விரைந்து வெளியிடுவதற்கான ஏற்பாடுகள் பற்றி ஆராய்வதற்கான கூட்டம் ஒன்று யாழ். பல்கலைக்கழகத்தில் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா தலைமையில் இன்று வெள்ளிக்கிழமை காலை இடம்பெற்றது.

2

## வேண்டும்! வேண்டும்!! சர்வதேச விசாரணை

### காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் வவுனியாவில் கவனவீர்ப்புப் போராட்டம்



வவுனியா, ஒக்.30

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளால் சர்வதேச நீதி கோரி வவுனியாவில் கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

வவுனியா, பழைய பஸ் நிலையம் முன்பாக சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றி இன்று காலை இந்த ஆர்ப்பாட்டம் காணாமல் ஆக்கப்பட் டோரின் உறவுகளால் முன்னெடுக்கப்பட்டது.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் ‘எங்கே, எங்கே ஒப்படைக்கப்பட்ட பிள்ளைகள் எங்கே?’, ‘பாடசாலை சென்ற மாணவர்கள் எங்கே?’, ‘வெள்ளைவானில் கடத்தப்பட்டவர்களுக்குப் பதில் தா!’, ‘வேண்டும்! வேண்டும்! சர்வதேச விசாரணை’ - என எழுதப்பட்ட சுலோக அட்டைகளை ஏந்தியிருந்தமையுடன் கோஷங்களையும் எழுப்பியிருந்தனர்.

2

## தான் தப்புவதற்காக அரசியல் கைதிகள் விவகாரத்தை கையில் எடுத்தார் மனோ!

### யாழில் சுமந்திரன் பகிரங்கக் குற்றச்சாட்டு



(எஸ். நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஒக்.30

மரணதண்டனைக் கைதி துமிந்த சில்வாவைத் விடுவிக்கக் கோரும் மனுவில் கையெழுத்திட்டு தவறான ஒரு செயலைச் செய்ததில் இருந்து தான் தப்புவதற்காக அரசியல் கைதிகள் விடயத்தைத் தமிழர் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் கையில் எடுத்துள்ளார்.

2

## யாழ். மருத்துவ ..............

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தக் கூட்டத்தில் வட மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் எஸ். கேதீஸ்வரன், உதவிப் பணிப்பாளர் மருத்துவர் எஸ். குமாரவேல், யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் மருத்துவர் த. சத்தியமூர்த்தி, யாழ். பல்கலைக் கழக மருத்துவ பீடாதிபதி மருத்துவ நிபுணர் எஸ். ரவிராஜ், சமுதாய மருத்துவத் துறைத் தலைவரும், பல்கலைக் கழக கொவிட் 19 செயலணியின் இணைப்பாளருமான மருத்துவர் எஸ். சுரேந்திரகுமாரன் மற்றும் நுண்ணுயிரியல், நோயியல் துறை விரிவுரையாளர்களும் கலந்து கொண்டனர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்தில் மீண்டும் பி.சி.ஆர். பரிசோதனைகளை அடுத்த வாரம் முதல் ஆரம்பிப்பதற்கு அந்தக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

பி.சி.ஆர். பரிசோதனைகளுக்குத் தேவையான மாதிரிகளை மாகாண சுகாதாரத் திணைக்களத்தின் ஊடாகப் பெற்றுக் கொள்வது எனவும், ஆய்வு நடவடிக்களுக்கான நுண்ணுயிரியல் சிறப்பு ஆலோசனைகளையும், தேவையான உயிரியல் காப்பு முறைகளைக் கண்காணித்து, உரியவ்அறிவுறுத்தல்களையும் யாழ். போதனா வைத்தியசாலையின் ஒட்டுண்ணியியல் நிபுணர் வைத்திய கலாநிதி திருமதி ரஜந்தி இராமச்சந்திரன் வழங்குவார் என்றும், உயிரியல் மற்றும் ஆய்வு கூடக் கழிவுகளைப் பாதுகாப்பாக அகற்றும் பணியை யாழ். போதனா வைத்தியசாலை மேற்கொள்ளும் என்றும் முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

மருத்துவ பீடத்தின் வழக்கமான பணிகளுக்குப் பாதிப்பேதும் ஏற்படாத வகையில் சர்வதேச நுண்ணுயிரியல் ஆய்வுத் தர நியமங்களுக்கமைய பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்படவிருக்கின்றன. மருத்துவ பீடத்தில் இருந்து கடந்த முறை இந்தப் பரிசோதனைகளை மேற்கொண்ட மருத்துவர்களான அ. முருகானந்தன், மு. கலாமதி மற்றும் பேராசிரியர் செ. கண்ணதாசன் ஆகியோர் மட்டுமே இந்தப் பரிசோதனைகளில் ஈடுபடவுள்ளனர். இவர்களுடன் பணியாற்றுவதற்கென நுண்ணுயிரியல் ஆய்வு கூடவியலாளர்களைப் பணிக்கு அமர்த்துவதற்கு யாழ். பல்கலைக்கழகம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்தில் தற்போதுள்ள பி.சி.ஆர். பரிசோதனை இயந்திரத்தின் மூலம் நாள் ஒன்றுக்கு 60 மாதிரிகளே சோதனை செய்யப்பட முடியும். இதனை 180 ஆக அதிகரிப்பதற்காக, ரூபா 50 லட்சம் பெறுமதியான புதிய பி.சி.ஆர். பரிசோதனை இயந்திரம் ஒன்றை வாங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும் எனத் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா இந்தக் கூட்டத்தில் உறுதியளித்துள்ளார். மருத்துவ பீடத்தினால் மேற்கொள்ளப் படும் பி.சி.ஆர். பரிசோதனை முடிவுகள் தினமும் மாகாண சுகாதாரத் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

## தான் தப்புவதற்காக ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் இன்று ஊடகவியலாளர்களைச் சந்தித்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அரசியல் கைதிகளை விடுவிப்பது தொடர்பான மனுவில் கையெழுத்திடக் கோரியபோது, இப்போது வேண்டாம் என்று சுமந்திரன் தெரிவித்தார் என்று மனோ கணேசன் தெரிவித்துள்ளமை தொடர்பில் ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பியபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

## துப்பாக்கியும் வாளும் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மட்டக்களப்பு மாவட்ட விசேட குற்ற விசாரணைப் பிரினருக்குக் கிடைக்கப் பெற்ற தகவலின் அடிப்படையில் இந்த ஆயுதங்கள் மீட்கப்பட்டுள்ளன.

சவுக்கடி கடற்கரையை அண்டிய பகுதியில் உள்ள பற்றைக்காட்டுக்குள் உரப்பைகளினால் சுற்றப்பட்ட நிலையில் குறித்த ஆயுதங்கள் புதைக்கப்பட்டிருந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளன.

இவை எதற்காகப் பயன்படுத்தப்பட்டன? யாரால் கொண்டுவந்து புதைக்கப்பட்டன? என்பது தொடர்பான விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்று மட்டக்களப்பு மாவட்ட விசேட குற்ற விசாரணைப் பிரிவின் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

## கரவெட்டியில் ...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வந்த நிலையில் அவர் கிராமத்தில் நடமாடியுள்ளார். இந்தநிலையில், இராஜ கிராமத்தில் 60 குடும்பங்கள் சுயதனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

தொற்றாளருடன் நேரடித் தொடர்பிலிருந்த யாராவது தனியார் பஸ் சேவையில் கடமையாற்றினால் பயணிகளுக்குத் தொற்று ஏற்படலாம். அதனால் தொற்றாளருடன் நேரடித் தொடர்புடையோரைக் கண்டறியும் வகையில் பருத்தித்துறை - யாழ்ப்பாணம் 750 வழித்தடச் சேவையில் ஈடுபடும் அனைத்துத் தனியார் பஸ்களும் சுகாதாரத் துறையினரின் அறிவுறுத்தலில் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

## யாழ். மீன் சந்தை ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நுகர்வோர் இது தொடர்பில் அச்சம் கொள்வதைத் தடுக்கும் நோக்கிலுமே பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

குருநகர், பாஷையூர், சின்னக்கடை, நாவாந்துறை, கல்வியங்காடு உள்ளிட்ட 6 அங்காடிகளில் இருந்து தலா 5 பேர் என்ற அடிப்படையில் முதல் கட்டமாக இந்த பரிசோதனை இடம்பெற்றது. இவ்வாறு மேற்கொண்ட பரிசோதனைகளில் எவருக்கும் தொற்று இல்லை எனக் கண்டறியப்பட்டால் தொடர்ந்தும் சுகாதார நடைமுறைகளை பின்பற்றி சந்தைகள் இயங்கும். இவ்வாறான பரிசோதனைகளை அடுத்த கட்டமாக மரக்கறிச் சந்தைகள் மீதும் தொடர்வது தொடர்பிலும் நடவடிக்கை இடம்பெறுகின்றது.

## 'கொரோனா'வுக்கு .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மரணச்சடங்குகளில் 25 பேர் மாத்திரம் அனுமதிக்கப்படவேண்டும் எனவும், வெளிமாவட்டத்தில் இருந்து மக்கள் வருகை தருவது தவிர்த்துக்கொள்ளப்பட வேண்டும் எனவும் முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

அத்தோடு தனியார் கல்வி நிறுவனங்கள் இயங்கத் தடை விதிக்கப்பட்டுள்ள அதேவேளை திறந்த சந்தைக்கும் அனுமதி இல்லை எனத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்து.

விளையாட்டுப் போட்டிகளை ஒத்திவைத்தல், மக்கள் கூட்டங்களை மற்றும் பொது நிகழ்வுகளை ஒத்திவைக்கவும் குறித்த கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

பஸ்களில் இருக்கைகளில் மட்டும் இருந்து பயணிப்பதற்கு அனுமதி எனவும், உணவகங்களில் இருந்து உண்ணுவதற்குத் தடையும் விதிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு வெளி மாவட்டத்தில் இருந்து வருகை தருவோர் கிராம சேவகர்கள் ஊடாகப் பதிவை மேற்கொள்ள வேண்டும் எனவும், அரச அலுவலகங்களில் அரச உத்தியோகத்தர்களுக்குத் தகவல் திரட்டு செய்யப்பட வேண்டும் எனவும் முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

ஆலயங்களில் மதகுருமார்களுக்கு மட்டும் அனுமதித்துள்ள அதேவேளை அன்னதானங்களுக்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

அவசர நிலையைக் கருதி ஒருங்கிணைத்த செயலகமாக மாவட்ட செயலகம், பிரதேச செயலகங்கள் 7 நாட்களும் செயற்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த மக்களுக்கு அவசர தொலைபேசி உதவி இலக்கமாக 0212225000 அறிவிக்கப்பட்டுள்ளது.

இன்று இடம்பெற்ற குறித்த கூட்டத்தில் யாழ்மாவட்டஅபிவிருத்திஒருங்கிணைப்புக் குழுத் இணைத்தலைவர் அங்கஜன் இராமநாதன், யாழ். மாவட்ட அரச அதிபர் க.மகேசன், மேலதிக அரச அதிபர் ம.பிரதீபன், வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணப்பாளர் வைத்தியர் ஏ.கேதீஸ்வரன், வடக்கு மாகாண உளநல சேவை பணிப்பாளர் ஏ.கேசவன், யாழ். போதனா வைத்தியசாலை பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி, யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி, யாழ். மாவட்ட அனர்த்த முகாமைத்துவ உதவிப் பணிப்பாளர், யாழ். மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர், பொலிஸ் உயர் அதிகாரிகள், பிரதேச செயலாளர்கள், யாழ். மாநகர ஆணையாளர், பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர்கள், சுகாதார சேவை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் எனப் பலர் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

கூட்டம் நிறைவடைந்ததும் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்களை யாழ். மாவட்ட அரச அதிபர் க.மகேசன் ஊடகங்களுக்கு அறிவித்துள்ளார்.

## குருநாகல் மாநகரில் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனக் குருநாகல் மாநகரசபை அதிகார பிரதேசத்தின் பொது சுகாதார பரிசோதகர் தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாக வில்கொட பகுதியில் இன்று பிற்பகல் முதல் பயணக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

## வேண்டும்!வேண்டும்!! ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுமார் அரை மணிநேரம் போராட்டத்தில் ஈடுபட்ட தாய்மார் பின்னர் அங்கிருந்து சென்றிருந்தனர். (100)









# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## நினைவழியா நினைவு நாள்

ஈழத் தமிழர்களின் – குறிப்பாக வடக்குத் தமிழர்களின் – வரலாற்றில் இன்றைய நாள் மிக முக்கியமான தினம்.

சரியாகக் கால் நூற்றாண்டுக்கு முன்னர் இதே தினத்தின் மாலைப் பொழுதில்தான் ஒரு சில கணத்துளிக்குள் குடாநாட்டின் வலிகாமம் மக்கள் ஒட்டுமொத்தமாக ஒரு வரலாற்று முடிவை எடுத்து, தமது சரித்திரத் தீரத்தை ஒன்றுபட்டு நின்று, செயற்படுத்திக் காட்டினர்.

உலகமே தமிழர்களை ஒரு கணம் திரும்பி நின்று பார்த்து அதிசயித்தது. தம் இனத்துக்காகத் தம்முயிரையே ஒரு கணத்தில் ஈகம் செய்யும் பல நூறு கரும்புலிகளை – உயிராயுதங்களை – உலகுக்குக் காட்டி அதிசயிக்க வைத்த தமிழ் மக்கள், ஒட்டுமொத்தமாகத் தமது உடைமைகளையும் சொத்துகளையும் ஈகம் செய்யும் முடிவுக்கும் தாங்கள் தயார் என்று தங்களின் தியாகத்தை வெளிப்படுத்திய போது அதைப் பார்த்து, அதிசயித்து, விக்கித்து நிற்பதைத் தவிர உலகுக்கு வேறு வழி இருக்கவில்லை.

ஆம். வலிகாமம் இடப்பெயர்வு என்ற பேரனர்த்தத்தை – பெரும் துயரத்தை – தாமாகவே சுமக்குள் ஒரு முடிவை வலிகாமத்தின் ஐந்து லட்சம் மக்கள் ஒன்றுபட்டு, ஒரு சில மணி நேரத்துக்குள் தீர்மானித்து எடுத்த வரலாற்று நிகழ்வின் இருபத்தியைந்தாவது ஆண்டு இன்றைய இந்த மாலைப் பொழுதில்தான் கடந்து செல்கின்றது.

'சூரியக்கதிர்' (ரிவிரச) என்ற குறியீட்டுப் பெயருடன் பிரமாண்டமான ஓர் ஆக்கிரமிப்புப் படையெடுப்பை சந்திரிகா குமாரதுங்க தலைமையிலான சிங்கள அரசு வடக்கில் ஆரம்பித்தது.

விடுதலைப் புலிகளுடனான சமாதான முயற்சிகள் 1995 ஏப்ரல் 19 ஆம் திகதி, முறிவடைந்தமையை அடுத்து, 'சமாதானத்திற்கான யுத்தம்' என்ற விபரீதமான – விநோதமான – சிந்தனையை முன்வைத்துத் தனது ஆக்கிரமிப்புத் திட்டத்தைக் கட்டவிழ்த்தது சந்திரிகா அரசு.

'சமாதானத்தின் விரோதிகளை' நசுக்கிவிடுவதற்கு யுத்தம் தவிர்க்க முடியாதது என்ற கோட்பாட்டுடன் தனது ஆக்கிரமிப்பு நடவடிக்கையை அது பெரும் எடுப்பில் முன்னெடுத்தது. பேரழிவு ஆயுதங்களைப் பயன்படுத்தியபடி, பெரும் பிரசாரப் போரையும் சமாந்தரமாக மேற்கொண்டவாறு, பலாலியிலிருந்து முன்னேறிய இலங்கைப் படைகள், யாழ்ப்பாண நகரம் உட்பட்ட வலிகாமம் பகுதியைக் கைப்பற்றியபோது, அந்த ஆக்கிரமிப்புப் படைகளுக்கு தமிழரின் மூளை மையமாம் யாழ்ப்பாணத்தில் பெரும் தலைகுனிவாக ஏமாற்றமே காத்திருந்தது.

அத்தகைய ஒரு வரலாற்றுப் பாடத்தை வலிகாமம் தமிழர் ஒன்றுபட்டு எடுத்து, ஆக்கிரமிப்பு இராணுவத்துக்குப் போதித்திருந்தனர்.

படைகள் கைப்பற்றிய யாழ்ப்பாண நகரில் பொது சனங்கள் எவருமே இருக்கவில்லை. சன சஞ்சாரமேயற்ற ஒரு பேய் நகரத்தையே – வெறிச் சோடிய குடியிருப்புக்களைக் கொண்ட ஒரு சூனியப் பிரதேசத்தையே – சிங்கள இராணுவம் கைப்பற்றியது.

விடுதலைப் புலிகளின் கோரிக்கைக்கு செவி சாய்த்து ஒட்டுமொத்த வலிகாமம் மக்களும் – ஐந்து லட்சம் பேரும் – போட்டது போட்டபடி இருக்க, கையில் அகப்பட்ட பொருள்களுடன் ஒரு குறுகிய கால இடைவெளியில் வலிகாமத்தையே விட்டகன்ற உலகப் பேரதிசயம் இந்தத் தினத்தின் மாலைப் பொழுதில்தான் அரங்கேறியது. அந்தத் துயர நிகழ்வு அரங்கேறிய நாளின் இருபத்தியைந்தாவது வருட தினத்தை நாம் இன்று கடந்து செல்கின்றோம்.

வலிகாமத்தின் ஒட்டுமொத்த சனத்தொகையான ஐந்து லட்சம் மக்களும் வடமராட்சி, தென்மராட்சி மற்றும் வன்னிப் பிரதேசங்களுக்கு ஓரிரவில் இடம்பெயர்ந்த அந்த நகர்வின் அவலம், சொல்லில் வடித்து விட முடியாத சொல்லொணாத் துன்ப துயரங்களைத் தன்னகத்தே கொண்டது.

விடுதலைப் புலிகளின் பிடியிலிருந்து யாழ்ப்பாண மக்களை விடுவித்து அவர்களுக்கு வாழ்வளிக்கு விதத்தில் 'சமாதானத்திற்கான யுத்தம்' முன்னெடுக்கப்படுவதாக உலகம் முழுவதும் பிரசாரம் செய்த சந்திரிகா அரசு, ஒரு குறுகிய கால இடைவெளிக்குள் பேரவலங்களை அனுபவித்தவாறு வலிகாமம் மக்கள் சனசமுத்திரமாக இடம்பெயர்வார்கள் என்று கனவிலும் எதிர்பார்த்திருக்கவில்லை.

வலிகாமத்தின் ஒட்டுமொத்த சனத்தொகையும் சிங்கள ஆக்கிரமிப்புப் படைகளின் பிடிக்குள் சிக்க விரும்பாது, விடுதலைப் புலிகளுடன் சேர்ந்து தென்மராட்சிக்கு இடம்பெயர்ந்தமை வரலாற்றில் பின்னால் நிகழப் போகின்ற சில விடயங்களுக்குக் கட்டியம் கூறலாக அமைந்தது.

ஒன்று – தமிழரின் விடுதலைப் போராட்டத்தில் இது போன்ற மோசமான பல இடம்பெயர்வுகளை அவர்கள் இனிமேல் சந்திக்க வேண்டியிருக்கும். அதற்குத் தயாராக இருங்கள் என்ற செய்தி – தமிழர்களுக்கு.

இரண்டு – தமிழர்களின் நிலங்களை ஆக்கிரமிக்க முடியுமே தவிர, அவர்களி மனங்களை ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் மூலம் வெற்றி கொள்ளவே முடியாது என்ற செய்தி – பௌத்த, சிங்களப் பேரினவாதிகளுக்கு.

மூன்று – புலிகள் வேறு, தமிழர்கள் வேறு அல்லர். தமிழ் மக்களின் மனதில் புலிகள் பூஜிக்கப்படுகின்றார்கள். அதனால்தான் தமது வாழ்வியல் கட்டமைப்புகளையே துறந்து, புலிகளுடன் ஒன்றுபட்டு இடம்பெயந்தார்கள் தமிழர்கள் என்ற செய்தி – சர்வதேசத்துக்கு.

இப்படிப் பல செய்திகளை உணர்த்திய வலிகாமம் வரலாற்று இடம்பெயர்வின் இருபத்தியைந்தாவது ஆண்டு ஞாபகம், நினைவழியா நாளாக இன்று நம்மைக் கடந்து செல்கின்றது.

# தமிழ்த் தேசிய அரசியலை நசுக்குகின்ற செயற்பாட்டில் பெரும்பான்மை தலைமை!

## உள்ளது என்கிறார் கலையரசன் எம்.பி.



பெரும்பான்மை அரசியல் தலைவர்கள் தமிழ்த் தேசிய அரசியலை நசுக்கும் செயற்பாட்டை முன்னெடுத்து வருகின்றனர் என நாடாளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் தெரிவித்தார்.

திருக்கோவில் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள சங்கமன்கண்டி கிராமத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர் –

பெரும்பான்மை அரசியல் தலைவர்களின் அடக்குமுறையை எதிர்த்து அரசியல் செய்யவேண்டிய நிலையில் நாங்கள் இருக்கின்றோம். எனவே, இவ்வாறான சூழ்நிலையில் இளைஞர் அமைப்புகளும் பொது மக்களும் விழிப்புடன் இருக்க வேண்டியது காலத்தின் கட்டாயம்.

கடந்த காலத்தில் தமிழ்க் கிராமங்கள் அபிவிருத்தியில் பின்னோக்கி கவனிப்பாரற்ற அரசியல் ரீதியான அபிவிருத்தியில் புறக்கணிக்கப்பட்டு வந்துள்ளன. இருந்தபோதும் தற்போது எமது மக்களுக்குப் பல அபிவிருத்தியை மேற்கொள்ள பல தடைகள் எழுகின்றன.

பாதிக்கப்பட்டு வறுமையில் வாடும் குடும்பங்களுக்கு ஒரு லட்சம் வேலை வாய்ப்பில் முன்னுரிமை வழங்கப்பட வேண்டும். ஆனால் போட்டிப் பரீட்சையில் கலந்து கொள்ளாது வீடுகளில் இருந்தவர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளமை கவலைக்குரிய விடயம். அடிப்படை வசதிகள் அற்ற மக்களுக்கு இந்த வேலைவாய்ப்பு வழங்கப்பட வேண்டும் என்பதில் நாங்கள் உறுதியாக இருக்கின் றோம்.

அரசியல் ரீதியான அழுத்தங்கள் தொடராக இருக்கின்றமையுடன் நாட்டில் அநியாயம் மேலோங்கி நிற்கிறது. இவை நிறுத்தப்பட வேண்டும். – எனத் தெரிவித்தார்.

# தனிமைப்படுத்தலில் உள்ளவர்களை கண்காணிப்பதற்கு நடவடிக்கைகள்!

சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளவர்களை கண்காணிக்கும் புதிய வழிமுறையொன்றை கொரோனா வைரஸ் தொற்றுப் பரவலைத் தடுப்பதற்கான தேசிய செயலணி அறிமுகப்படுத்தியுள்ளது.

கடந்த காலங்களில் கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளானவர்கள் தனிமைப்படுத்தல் நிலையங்களில் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டனர்.

இந்த நிலையில், தற்போது கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளானவர்களுடன் தொடர்புடையவர்களைத் தங்களது வீடுகளிலேயே சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்ட குறித்த நபர் உரிய விதிமுறைகளை பின்பற்றுகின்றாரா என்பதை கண்காணிக்கும் வழிமுறை பல்வேறு கட்டங்களாக நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இந்த நிலையில், சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டவர்களை காலை 6 மணி முதல் 11 மணி வரை கண்காணிக்கும் பணியில் பொது சுகாதார பரிசோதகர்கள் அல்லது சுகாதார அதிகாரிகள் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

அத்துடன், முற்பகல் 11 மணி முதல் பிற்பகல் 4 மணி வரை அந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த பொலிஸ் அதிகாரிகளும், பிற்பகல் 4 மணி முதல் மறு நாள் காலை 6 மணி வரை முப்படை அதிகாரிகளும் இந்தக் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபடவுள்ளனர் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, தனிமைப்படுத்தல் விதிமுறைகளை மீறுவதாகக் கண்டறியப்படுபவர்கள் தலைமை சுகாதார வைத்திய அதிகாரியால் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்படுவார் என கொரோனா வைரஸ் தொற்றுப் பரவலைத் தடுப்பதற்கான தேசிய செயலணி மேலும் தெரிவித்துள்ளது.

# கொக்கட்டிச் சோலையிலும் ஒருவருக்குக் கொரோனா!

மட்டக்களப்பு, ஒக்.30

மட்டக்களப்பு மாவட்டத்தில் மேலும் இருவருக்கு கொரனா உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக கிழக்கு மாகாண சுகாதார பணிப்பாளர் டாக்டர் அழகையா லதாகரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் கொக்கட்டிச் சோலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மாவடி முன்மாரி பகுதியில் ஒருவரும் ஓட்டமாவ டியில் ஒருவரும் இவ்வாறு இனங்காணப்பட்டுள்ளனர்.

ஓட்டமாவடியில் இனங்காணப்பட்டவர் பேலியகொட மீன்சந்தை கொத்தணியுடன் தொடர்புடையவர் எனவும் மாவடிமுன்மாரியை சேர்ந்தவர் கொழும்பில் இருந்து வந்தவர் எனவும் அவர் தெரிவித்தார்.

இதேநேரம் குறித்த நபர் கடந்த 27 ஆம் திகதி கொழும்பில் இருந்துவந்துள்ளார் எனவும் தனியார் பேருந்து ஒன்றில் மட்டக்களப்புக்கு வருகைதந்துள்ளார் எனவும் சுகாதார பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

அவர் சுகவீனம் காரணமாக மகிழடித் தீவு வைத்தியசாலைக்கு சிகிச்சைக்கு சென்ற நிலையில் அங்கு அவர் மீது சந்தேகம் கொண்டு பி.சி.ஆர். சோதனைமேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரி வித்துள்ளனர்.

குறித்த நபருடன் பயணித்தவர்கள், பழகியவர்கள்,குறித்த நபர் சென்ற இடங்களில் பழகியவர்களை இனங்கண்டு தனிமைப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன எனவும் சுகாதார பிரிவினர் தெரிவித்தனர்.

# பொலநறுவையில் கொரோனா சிகிச்சை நிலையம் யாழிலிருந்து 20 தாதியர்களை அனுப்ப நடவடிக்கை

பொலநறுவையில் உள்ள கொரோனா சிகிச்சை நிலையத்துக்கு யாழ்.போதனா வைத்தியசாலையில் கடமையாற்றிய 20 தாதியர்கள் அனுப்பி வைக்கப்படவுள்ளனர். கொரோனோப் பெருந்தொற்றின் மூன்றாம் அலை காரணமாக கொரோனா சிகிச்சை நிலையங்களில் நோயாளர்கள் நிரம்பி உள்ளனர்.

இந்நிலையில் சிகிச்சை நிலையங்களில் தாதியர் பற்றாக்குறை நிலவுகின்றது. அதனால் கூடுதல் தாதியர்களை கடமைக்கு அமர்த் தும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அந்த வகையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் கடமையாற்றும் 4 தமிழ் தாதியர்கள் உட்பட 20 தாதியர்கள் பொலநறுவை கொரோனா சிகிச்சை நிலையத்துக்கு அனுப்பி வைக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என வைத்தியசாலை வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# பழைய நிலைக்கு திரும்பியது இந்தியாவின் பொருளாதாரம்!

## பிரதமர் மோடி தெரிவிப்பு



பொருளாதாரம் எதிர்பார்த்ததை விட மிக வேகமாக பழைய நிலைக்குத் திரும்பி வருவதாக பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில் அவர் மேற்படி குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது தொடர்ந்து தெரிவித்துள்ள அவர்– பொருளாதாரத்தைத் தொடர்ந்து மீட்டெடுக்கத் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் ஒட்டுமொத்த பொருளாதார ஸ்திரத்தன்மையை உறுதிசெய்து சரியான நேரத்தில் மேற்கொள்ளப்படுகின்றன என்பதை மத்திய அரசு உறுதி செய்யும்.

நிலக்கரி, வேளாண்மை, தொழிலாளர் நலன், பாதுகாப்பு மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து போன்ற பல்வேறு துறைகளில் தனது அரசின் பல சீர்திருத்த நடவடிக்கைகள் பொருளாதாரத்தை கொரோனா நெருக்கடிக்கு முன்னர் இருந்த உயர் வளர்ச்சி பாதையில் கொண்டு செல்ல உதவும்.

தொற்றுநோயைச் சமாளிக்க இந்தியா ஒரு விஞ்ஞானத்தால் இயங்கும் அணுகுமுறையை எடுத்துள்ளது என்று பல ஆய்வுகள் குறிப்பிட்டுள்ளன. இது அதிக இறப்புகளுடன் வைரஸ் விரைவாக பரவ வழிவகுக்கும் ஒரு சூழ்நிலையைத் தவிர்க்க உதவியது. – எனத் தெரிவித்துள்ளார்.

# பிரதமர் மோடி இருநாள் குஜராத் பயணம் முன்னாள் முதல்வர் மறைவுக்கு இரங்கல்!



மறைந்த குஜராத் முன்னாள் முதலமைச்சர் கேசுபாய் பட்டேலின் குடும்பத்தினரை நேரில் சந்தித்து பிரதமர் மோடி இரங்கல் தெரிவித்தார்.

முன்னதாக இரண்டு நாள் பயணமாக அகமதாபாத் வந்த மோடியை விமான நிலையத்தில் ஆளுநர் ஆச்சார்ய தேவ்ரத், முதலமைச்சர் விஜய் ரூபானி உள்ளிட்டோர் வரவேற்றனர்.

காந்திநகர் புறநகரில் வசிக்கும் தமது தாயாரை இன்று சந்திக்க உள்ள மோடி, நர்மதா மாவட்டம் கேவாடியாவில், பட்டேல் சிலை அருகே பல்வேறு சுற்றுலாத் திட்டங்களை ஆரம்பித்து வைத்தார். அகமதாபாத் கேவாடியா இடையேயான நீர்விமான சேவையை நாளை மோடி ஆரம்பித்து வைக்க உள்ளார்.

# பயங்கரவாதத் தாக்குதலை நடத்தியது பாகிஸ்தானே!

## அந்நாட்டு அமைச்சர் ஒப்புக்கொண்டார்



புல்வாமா பயங்கரவாதத் தாக்குதலை நடத்தியது பாகிஸ்தான் என்பதை அந்த நாட்டு அமைச்சரே ஒப்புக்கொண்டுள்ளார் என இந்தியத் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜம்மு – காஷ்மீரின் புல்வாமா மாவட்டத்தில் கடந்த ஆண்டு பெப்ரவரியில் இந்திய பாதுகாப்புப் பொலிஸ் படை வீரர்களைக் குறிவைத்து பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலில் 40 வீரர்கள் மரணமடைந்தனர்.

பாகிஸ்தானைச் சேர்ந்த ஜெய்ஷ் – இ முகம்மது என்ற பயங்கரவாத இயக்கம் இந்தத் தாக்குதலுக்குப் பொறுப்பேற்றிருந்த நிலையில், தங்களுக்கு எந்தத் தொடர்பும் இல்லையென பாகிஸ்தான் அரசு மறுத்து வந்தது.

இந்நிலையில், பாகிஸ்தான் நாடாளுமன்றத்தில் உரையாற்றிய அந்நாட்டின் தொழில்நுட்பத்துறை அமைச்சர், புல்வாமா தாக்குதல் இம்ரான்கான் தலைமையிலான அரசின் மிகப்பெரிய சாதனை எனக் கூறியுள்ளார்.

இதன்மூலம் புல்வாமாத் தாக்குதலை பாகிஸ்தானே திட்டமிட்டு அரங்கேற்றியுள்ளமை நிரூபிக்கப்பட்டுள்ளதாக இந்தியத் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அரசியலுக்கு வரவேண்டாம் ரஜனிக்கு சீமான் அறிவுரை!



தமிழகத்தில் அரசியில் களம் மோசமாக இருக்கிறது. இது உங்களுக்கு வேண்டாம் என ரஜினிக்கு சீமான் அறிவுரை கூறியுள்ளார்.

பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர் திருநாளை முன்னிட்டு சென்னையில் நாம் தமிழர் கட்சி தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் அவரது படத்துக்கு மலர்வணக்கம் செலுத்தினார்.

நிகழ்வுக்கு பின் செய்தியாளர்களை சந்தித்த சீமான், தற்போதுள்ள அரசியல் சூழல் மிக மோசமான ஆட்டமாக இருக்கிறது.

ரஜினியை களமிறக்கிவிடுபவர்களே அவரை இழிவாக பேசுவார்கள். அவரால் விமர்சனங்களைத் தாங்க முடியாது. அவருக்கு தேவை ஓய்வு, நிம்மதி.

சாதி, மதம், சாராயம், பணம் மற்றும் திரைக்கவர்ச்சி என்ற ஐந்தால்தான் அரசியல் கட்டமைக்கப்பட்டுள்ளது. இதில் ரஜினியிடம் திரைகவர்ச்சி ஒன்று மட்டும் இருக்கிறது. ஆனால் மற்றதெல்லாம் பேராபத்தாக இருக்கின்றன.

எனவே அவர் அரசியலுக்கு வர வேண்டாம். ஆலோசனை வழங்கினாலே போதும். அரசியலில் ரஜினி, கமலை விட நான் மூத்தவன்.

நடிகர் ரஜினிகாந்த் அரசியலுக்கு வந்தாலும் மாற்றம் ஏற்படாது.– என்றும் நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் தெரிவித்துள்ளார்.

# சீனாவுடனான எல்லைத் தகராறில் இந்தியா எதற்கும் தயங்கக் கூடாது!

## உஷார்படுத்துகிறது அமெரிக்கா



எல்லைத் தகராறு விவகாரத்தில் எந்த வகையில் தயக்கம் காட்டினாலும் அது சீனாவை அடக்குவதற்கான முயற்சிகளுக்கு கேடு விளைவிக்கும் என இந்தியாவிடம் அமெரிக்கா கூறியதாக தகவல் வெளியாகியுள்ளது.

அமெரிக்க வெளியுறவு மற்றும் பாதுகாப்பு அமைச்சர்கள் இந்தியா வந்து, 'டூ பிளஸ் டூ' பேச்சியில் ஈடுபட்டபோது, அமைச்சர்கள் ராஜ்நாத்சிங் மற்றும் ஜெய்சங்கரிடம் எல்லை தகராறு விவகாரத்தில்தங்களதுஉறுதியானஆதரவைத்தெரிவித்துள்ளனர்.

சீனாவுடனான மோதலை உலகமே உற்றுக் கவனித்து வருவதாகவும், இந்த விவகாரத்தில் இந்திய தரப்பில் எந்த வகையில் தயக்கம் காட்டினாலும், சீனாவின் விரிவாதிக்க கொள்கையைக் கட்டுப்படுத்தும் முயற்சிகளுக்குப் பாதிப்பை ஏற்படுத்தி விடும் என்று அமெரிக்க அமைச்சர்கள் கூறினர் எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# கப்பலைத் தாக்கி அழிக்கும் ஏவுகணை மீண்டும் சோதனை செய்தது இந்தியா!



ஏவுகணையை இந்திய கடற்படை மீண்டும் பரிசோதனை நடத்தியுள்ளது.

லடாக் எல்லையில் சீனாவுடன் மோதல் போக்கு நிலவும் நிலையில், இந்தியா தொடர்ந்து ஏவுகணைகளைப் பரிசோதித்து வருகிறது.

அரபிக் கடல்பகுதியில் கடந்த சில தினங்களுக்கு முன்பு ஐ.என்.எஸ். பிரபால் எனும் போர் கப்பலில் இருந்து ஏவுகணையைச் செலுத்தி, பழைய கப்பல் ஒன்றைத் தாக்கி மூழ்கடித்து கடற்படை சோதனை நடத்தியிருந்தது.

இந்நிலையில் வங்காள விரிகுடா கடலில் ஐ.என்.எஸ். கோரா எனும் போர் கப்பலில் இருந்து ஏவுகணையை செலுத்தி கப்பலை தாக்கி இந்திய கடற்படை சோதனை நடத்தியுள்ளது.

இந்தப் படங்களைப் பகிர்ந்துள்ள கடற்படை, அந்த ஏவுகணை மிகவும் துல்லியமாக இலக்கைத் தாக்கியதாகக் குறிப்பிட்டுள்ளது.

# ஒரேநாளில் 49 ஆயிரம் பேர் கொரோனாவினால் பாதிப்பு!

இந்தியாவில் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை கடந்த சில நாள்களாக இறங்கு முகத்தில் செல்கிறது. இருப்பினும் மொத்த பாதிப்பாளர்களின் எண்ணிக்கை 80 லட்சத்தைக் கடந்துள்ளது.

அந்தவகையில் நேற்று (வியாழக்கிழமை) 49 ஆயிரத்து 281 பேர் புதிய தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். இதனையடுத்து பாதிக்கப்பட்டுள்ளவர்களின் மொத்த எண்ணிக்கை 80 லட்சத்து 88 ஆயிரத்து 46 ஆக அதிகரித்துள்ளது.

அத்துடன் 568 பேர் உயிரிழந்துள்ள நிலையில், உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை ஒரு லட்சத்து 21 ஆயிரத்தைக் கடந்துள்ளது. குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 73 லட்சத்து 71 ஆயிரத்தை கடந்துள்ளமையுடன் 5 லட்சத்து 95 ஆயிரத்துக்கும் அதிகமானோர் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இவர்களில் 8 ஆயிரத்துக்கும் மேற்பட்டோரின் நிலைமை கவலைக்கிடமாகவுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# செனகலில் இருந்து ஸ்பெயின் புறப்பட்ட படகு விபத்துக்குள்ளானதில் 140 பேர் உயிரிழப்பு!

செனகலில் இருந்து ஸ்பெயினின் கேனரி தீவுகளுக்கு புறப்பட்ட படகொன்று விபத்துக்குள்ளானதில், 140 பேர் உயிரிழந்துள்ளனர் என ஐ.நா. தெரிவித்துள்ளது.

எம்பூரிலிருந்து சுமார் 200 பயணிகள் பயணித்த இந்தப் படகு நகரத்தை விட்டு வெளியேறிய சிறிது நேரத்திலேயே தீப்பிடித்துக் கவிழ்ந்தது என்று சர்வதேச இடம்பெயர்வு அமைப்பு தெரிவித்துள்ளது.

வடமேற்கு கடற்கரையில் செயிண்ட் லூயிஸுக்கு அருகில் படகு மூழ்கியதாகவும், சுமார் 60 பேர் மீட்கப்பட்டனர் எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.



ஸ்பெயினின் கேனரி தீவுகள் வழியாக புலம்பெயர்ந்தோர் ஐரோப்பாவின் பிரதான நிலப்பகுதியை அடைய முயற்சிக்கின்றனர் என நம்பப்படுகிறது. மேற்கு ஆபிரிக்காவிலிருந்து இந்த பாதை 2018ஆம் ஆண்டு முதல் பிரபலமடைந்துள்ளது.

மேற்கு ஆபிரிக்காவிலிருந்து கேனரி தீவுகளுக்கு புலம் பெயர்ந்தவர்களின் எண்ணிக்கை இந்த ஆண்டு நான்கு மடங்காக - 11 ஆயிரம் ஆக - அதிகரித்துள்ளது.

663 புலம்பெயர்ந்தோரை ஏற்றிச் செல்லும் பதினான்கு படகுகள் செப்ரெம்பர் மாதத்தில் மட்டும் இந்த பயணத்தை மேற்கொள்ள முயற்சித்தன. அவற்றில் பல படகுகள் விபத்தில் சிக்கி மூழ்கி உள்ளன.

## பயங்கரவாதச் சம்பவங்களின் எதிரொலி பிரான்ஸில் அவசரகால நிலை பிரகடனம்

பிரான்ஸில் அண்மைக்காலமாக பதிவாகிவரும் பயங்கரவாத சம்பவங்களைத் தொடர்ந்து, அங்கு பாதுகாப்பு அவசரநிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

மேலும், வழிபாட்டுத் தலங்கள், பாடசாலைகள், பொது இடங்கள் ஆகியவற்றில் பாதுகாப்பு நலன் கருதி நாடு முழுவதும் பாதுகாப்பு படையினர் இரு மடங்காகக் குவிக்கப்பட்டுள்ளனர்.

முன்னதாக மூவாயிரம் வீரர்கள் குவிக்கப்பட்டிருந்த நிலையில் தற்போது அந்த எண்ணிக்கை ஏழாயிரம் வீரர்களாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

நாடு முழுவதும் முக்கிய நகரங்களில் அதிநவீன ஆயுதம் ஏந்தி பாதுகாப்பு படையினர் அதிரடி ரோந்து பணியில் ஈடுபட்டு வருகிறனர். மேலும், அந்நாட்டில் பயங்கரவாதச் செயல்களுக்கு ஆதரவாக குழுக்களை குறிவைத்து தீவிர தேடுதல் நடவடிக்கை நடைபெற்று வருகின்றன.

இதேவேளை இன்று (வெள்ளிக்கிழமை) முதல் நாடு முழுவதும் ஒரு மாத காலத்துக்கு (நவம்பர் இறுதி வரை) ஊரடங்கு மீண்டும் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

மது விடுதிகள், உணவு விடுதிகள், ஹோட்டல்கள், உணவு பொருள்கள் தவிர்த்த பிற பொருள்களை விற்பனை செய்யும் கடைகள் மூடப்படுகின்றன. பொதுமக்கள் கூடுகை தடை செய்யப்பட்டுள்ளது. நாட்டின் பிற பிராந்தியங்களுக்கு பயணத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

## பிக் பேஷ்ரி - 20 தொடரில் விளையாட இம்ரான் ஒப்பந்தம்

தென்னாபிரிக்க கிரிக்கெட் அணியின் சுழற்பந்து வீச்சாளர், ஆஸ்திரேலியாவில் நடைபெறும் ரி - 20 லீக் தொடரான பிக் பேஷ் தொடரில் விளையாட ஒப்பந்தம் செயயப்பட்டுள்ளார்.

இதன்மூலம் 41 வயதான ரிஸ்ட் ஸ்பின்னர் இம்ரான் தாஹிர், பிக் பேஷ் ரி - 20 தொடரில் முதல் முறையாக விளையாடவுள்ளார்.

மெல்போர்ன் ரெனேகட்ஸ் இம்ரான் தாஹிரை ஒப்பந்தம் செய்துள்ளது. இதுதொடர்பாக மெல்போர்ன் ரெனேகட்ஸ் அணி நிர்வாகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் -



'இம்ரான் உலகில் நடைபெறும் பெரும்பாலான ரி - 20 லீக்கில் மிகச் சிறப்பாக விளையாடி வருகிறார். மீண்டும் ஒருமுறை விக்கெட் வீழ்த்தும் மிரட்டும் நபராக இருப்பார்' எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிறிஸ்மஸ் பண்டிகைக்கு பின்னர்தான் இம்ரான் தாஹிர் இந்தத் தொடரில் கலந்து கொள்வார். இதனால் அவருக்கு பதிலாக ஆப்கானிஸ்தானைச் சேர்ந்த நூர் அஹமது விளையாடுவார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இஸ்லாமியர்களின் கோபத்தைக் காட்ட அவர்களுக்கு உரிமையுண்டு!

## மலேசியாவின் முன்னாள் பிரதமர் தெரிவிப்பு

பிரான்ஸில் தொடர்ச்சியாக பயங்கரவாத தாக்குதல்கள் நடத்தப்பட்டு வருகின்ற நிலையில், 'இஸ்லாமியர்கள் அவர்களின் கோபத்தை காட்ட உரிமை உள்ளது' என மலேசியாவின் முன்னாள் பிரதமர் மகாதீர் முகம்மது தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தனது டுவிட்டர் பக்கத்தில் கூறியுள்ளவை வருமாறு -

வரலாற்றில் பல முஸ்லிம்களை கொன்ற நாடு பிரான்ஸ். தற்போது இஸ்லாமியர்கள் அவர்களின் கோபத்தைக் காட்ட உரிமை உள்ளது. வெவ்வேறு கலாசாரத்தையும் மதிக்கத் தெரிந்து கொள்ள வேண்டும்.



தன்னுடைய மேற்கத்திய நடைமுறை, மதிப்புகள், வழக்கத்தை திணிக்க முற்படக்கூடாது எனக் குறிப்பிட்டார் அவர்.

அவர் பதிவிட்ட 13 இற்கும் அதிகமான டுவிட்டுகளில் சில விதி மீறல் பதிவு எனக்கூறி டுவிட்டர் நிறுவனம் நீக்கி உள்ளது.

அவரது கருத்துக்கு ஆதரவாகவும் எதிராகவும் நூற்றுக்கணக்கில் டுவிட்டர் பயனர்கள் கருத்துகளைப் பகிர்ந்து வருகின்றனர்.

டுவிட்டர் ஆரம்பத்தில் கருத்துக்களை நீக்க மறுத்துவிட்டது. ஆனால் இறுதியாக பிரான்ஸ் அரசாங்கத்தின் கடுமையான எதிர்வினையைத் தொடர்ந்து அவ்வாறு செய்தது.

நைஸில் நடந்த தாக்குதல் தொடர்பாக மகாதீர் ஒருபோதும் நேரடியாகக் குறிப்பிடவில்லை.

# பிரான்ஸில் கத்திக்குத்து; மூவர் சாவு, பலர் காயம்!



தெற்கு பிரான்ஸ் நகரமான நைஸில் ஒரு தேவாலயத்திற்கு அருகே நடத்தப்பட்ட கத்திக்குத்து தாக்குதலில் மூன்று பேர் உயிரிழந்தமையோடு, பலர் காயமடைந்துள்ளனர்.

நகர மேயர் கிறிஸ்டியன் எஸ்ட்ரோசி இந்த சம்பவத்தை 'பயங்கரவாதச் செயல்' என்று வர்ணித்துள்ளார்.

மேலும், மேயர் கிறிஸ்டியன் எஸ்ட்ரோசி 'கத்திக்குத்து தாக்குதலில் மூன்று பேர் உயிரிழந்தமையோடு, பலர் காயமடைந்துள்ளனர். தாக்குதல் நகரின் நோட்ரே டேம் தேவாலயத்தில் அல்லது அதற்கு அருகில் நடந்ததாகவும், தாக்குதல் நடத்தியவரை பொலிஸார் தடுத்து வைத்திருககின்றனர் எனவும் மேயர் கிறிஸ்டியன் எஸ்ட்ரோசி டுவிட்டரில் பதிவிட்டுள்ளார்.

தாக்குதலுக்குப் பின்னர் மூன்று பேர் இறந்திருக்கின்றமை உறுதி செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

தாக்குதலில் ஒரு பெண்ணின் தொண்டை வெட்டப்பட்டதாகவும், சந்தேக நபர் 'அல்லாஹு அக்பர்' (கடவுள் மிகப் பெரியவர்) என்று கத்தியவாறு தாக்குதல் நடத்தினார் எனவும் மேயர் மேலும் குறிப்பிட்டார்.

கொல்லப்பட்டவர்களில் ஒருவர் தேவாலயப் பராமரிப்பாளர் என்றும் தாக்குதலின் போது வழிபாட்டாளர்கள் கட்டடத்திற்குள் இருந்தனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரான்ஸின் தேசிய பயங்கரவாத எதிர்ப்பு பிரிவினர் இந்தத் தாக்குதல் தொடர்பான விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

இந்த இடத்தில் பாதுகாப்பு மற்றும் மீட்புப் படையினர் இருக்கின்றனர் என பிரான்ஸ் உட்துறை அமைச்சகம் டுவிட்டரில் கூறியமையுடன், இந்தப் பகுதியைத் தவிர்க்குமாறு குடியிருப்பாளர்களை வலியுறுத்தியுள்ளது.

கல்யாணமாலை
வட சர்வதேச திருமண சேவை

மணமகன் விபரம்
பிறந்த திகதி - 1987.06.02
மதம் - இந்து K
நட்சத்திரம் - ஆயிலியம்
பாவம் - 19 1/4
செவ்வாய் - 7 இல்
கல்வி - MBBS
தொழில் - Doctor
எதிர்பார்ப்பு - UK இல் MBBS பெண் Doctor தேவை.

மணமகள் விபரம்
பிறந்த திகதி - 1996.05.05
மதம் - இந்து K
நட்சத்திரம் - அனுஷம்
பாவம் - 9 1/4
சூரி /செவ்வாய் - 9 இல்
கல்வி - A/L
எதிர்பார்ப்பு - வெளிநாடு தேவை.

Kalyanamalai Vada.com தினசரி முகநூலிலும், யாழ் காலைக்கதிர் பத்திரிகையிலும் வெளிவரும் மணமக்களை நீங்களே தெரிவு செய்து எம்முடன் தொடர்புகொள்ள நாம் திருமணத்தை நிறைவேற்றித் தருவோம். மணமக்கள் விண்ணப்பப்படிவத்தினை புத்தகக் கடைகளிலும், பத்திரிகை விற்பனை நிலையங்களிலும் வாங்கி விண்ணப்பியுங்கள். முக நூலிலும் விண்ணப்பம் உண்டு. அலுவலக நேரம் காலை 9 தொடக்கம் 5 வரை. சனி, ஞாயிறு மற்றும் போயா தினங்களில் பதிவுகளை மேற்கொள்ள முடியும்.
பதிவுக் கட்டணம் 1000 + 300

உப அலுவலகம்,
சந்தை வீதி,
இமையாணன் மேற்கு,
உடுப்பிட்டி.
077 3434 415
077 8578 528

# அமெரிக்காவில் அசுர வேகத்தில் கொரோனா ஒரே நாளில் 91 ஆயிரத்துக்கு மேல் தொற்று!

அமெரிக்காவில் கொடிய கொரோனா வைரஸ் (கொவிட்-19) பெருந்தொற்றால், கடந்த 24 மணித்தியாலத்தில் மட்டும் 91 ஆயிரத்து 530 பேர் பாதிக்கப்பட்டமையோடு, ஆயிரத்து 47 பேர் உயிரிழந்துள்ளனர்.

அமெரிக்காவில் வைரஸ் தொற்றுப் பரவியதிலிருந்து பதிவான நாளொன்றுக்கான அதிகபட்ச பாதிப்பு எண்ணிக்கை இதுவாகும்.

உலகளவில் கொவிட் - 19 தொற்றால் அதிகபாதிப்பு மற்றும் உயிரிழப்பை சந்தித்த முதல்நாடாக விளங்கும் அமெரிக்காவில் இதுவரை மொத்தமாக 92 லட்சத்து 12 ஆயிரத்து 767 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இரண்டு லட்சத்து 34 ஆயிரத்து 177 பேர் உயிரிழந்துள்ளனர்.

தற்போதுவரை வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்ட 29 லட்சத்து 95 ஆயிரத்து 245 பேர் அங்குள்ள வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இதில் 16ஆயிரத்து 950 பேரின் நிலை கவலைக்கிடமாக உள்ளது.

அத்துடன் இதுவரை 59 லட்சத்து 83 ஆயிரத்து 345 பேர் வைரஸ் தொற்றிலிருந்து மீண்டு வீடு திரும்பியுள்ளனர்.

# மக்கள் ஒன்றுகூடுகின்றமையை இடர் வலயத்தில் தவிர்க்கவும்!

## ஜனாதிபதி கண்டிப்பான உத்தரவு



மருத்துவத் துறையிலும் கொவிட் ஒழிப்பு நடவடிக்கைகளிலும் ஈடுபட்டுள்ள அனைத்து தரப்பினருக்கும் தேவையான தகவல்களை இலகுவாக அறிந்துகொள்ளக் கூடிய புதிய செயலி (அப்ஸ்) மேல் மாகாண சுகாதார சேவைகள் அலுவலகத்தால் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு அறிமுகம்செய்து வைக்கப்பட்டது.

கொவிட் நோய்த் தொற்றாளர்கள், தொடர்புடையவர்கள், தனிமைப்படுத்தல், பி.சி.ஆர். பரிசோதனை சேவைகள், கண்காணிப்பு, தீர்மானங்களை மேற்கொள்ளல், நோய்த்தொற்றாளர்களுக்கு கிட்டிய பிரதேசங்களுடன் தொடர்புடைய தகவல்கள் உள்ளிட்ட தேவையான பல தரவுகளை இந்த புதிய செயலியின் மூலம் பெற்றுக் கொள்ள முடியும்.

ஜனாதிபதி தலைமையில் ஜனாதிபதி அலுவலகத்தில் தினமும் சந்திக்கும் கொவிட் ஒழிப்பு செயலணி நேற்று (வியாழக்கிழமை) ஒன்றுகூடிய சந்தர்ப்பத்தில் மேல் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் தம்மிக ஜயலத் தலைமையிலான குழுவால் புதிய செயலி அறிமுகப்படுத்தப்பட்டது.

புதிய அபிவிருத்திகள் தொடர்பான தகவல்களை எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அறிந்துகொள்ளக் கூடிய வகையில் தயாரிக்கப்பட வேண்டும் என ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

நாடளாவிய ரீதியில் உள்ள சுகாதார மருத்துவ அதிகாரிகள் பிரிவுகளின் எண்ணிக்கை 350 ஆகும். அவற்றில் 28 பிரிவுகளில் கொவிட் தொற்றாளர்கள் கண்டறியப்பட்டுள்ளனர்.

ஏனைய பிரதேசங்களுக்கும் பரவுவதைத் தவிர்ப்பதற்கு முடியுமான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன என செயலணி உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

வைரஸ் பரவுவதை தவிர்ப்பதற்கு முதலாவது, இரண்டாவது தொற்றாளர்கள் உட்பட 41 ஆயிரம் பேர் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். நாட்டின் அனைத்து பிரதேசங்களையும் உள்ளடக்கிய வகையில் எழுமாறாக பி.சி.ஆர். பரிசோதனைகளை மேற்கொள்ள வேண்டியதன் அவசியத்தை ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

பல சந்தர்ப்பங்களில் கொவிட் தொற்றாளர்கள் அதிகரிப்பதற்கு காரணமான விடயங்களைச் சரியாக அறிந்து மீண்டும் அவ்வாறு இடம்பெறுவதற்கு இடமளிக்கக்கூடாது.

கொழும்பு மாநகர சபை எல்லைக்குள் தொடர்ச்சியாக எழுமாறான பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. எனினும் எதிர்பாராத விதமாக பேலியகொடை மீன் சந்தை மற்றும் மினுவாங்கொடையை அண்டிய பிரதேசங்களில் கொவிட் கொத்தணி உருவானது.

பொருள்கள் பகிர்ந்தளிக்கும் வலயமைப்பின் ஊடாக வைரஸ் ஏனைய பிரதேசங்களுக்கும் பரவுவதைத் தவிர்ப்பதற்கு அனைத்துத் தரப்பினரதும் உதவி தேவையானதாகும். சுகாதார துறையின் வழிகாட்டல்களை முழுமையாகப் பின்பற்றுவது அனைவரினதும் சமூக பொறுப்பாகும் என்று ஜனாதிபதி குறிப்பிட்டார்.

தம்புள்ளை உள்ளிட்ட பொருளாதார மத்திய நிலையங்களை அண்மித்த பிரதேசங்களில் எழுமாறான பரிசோதனைகளை மேற்கொள்ளப்பட வேண்டும். கொவிட் கொத்தணி உருவாகக் கூடிய இடங்கள் தொடர்பில் தொடர்ந்தும் அவதானத்துடன் இருக்க வேண்டும் என்று ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

நேற்று நள்ளிரவு முதல் மேல் மாகாணத்துக்கு பொலிஸ் ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டுள்ளது. ஊரடங்கு சட்டத்தை மீறுவோருக்கு எதிராகச் சட்டம் கடுமையாக நடைமுறைப்படுத்தப்படும்.

எந்தவொரு பொலிஸ் நிலையத்தாலும் ஊரடங்கு சட்ட அனுமதிப்பத்திரம் வழங்கப்பட மாட்டாது. எனினும் மிகவும் அவசரமான சந்தர்ப்பங்களின் போது அதற்கு இடமளிக்கப்படும்.

இடர் வலயங்களுக்குள் மக்கள் ஒன்றுகூடுவது தவிர்க்கப்பட வேண்டும். மேல் மாகாணத்தில் திருமணங்கள் மற்றும் சமய நிகழ்வுகள் உள்ளிட்ட மக்கள் ஒன்றுகூடும் நிகழ்வுகளுக்கு இடமளிக்க வேண்டாம். - என ஜனாதிபதி தெரிவித்தார்.

## ஓய்வுபெறும் விமானப்படைத் தளபதி ஜனாதிபதி கோட்டாவைச் சந்தித்தார்!



36 வருட சேவையை நிறைவுசெய்து நவம்பர் மாதம் 02 ஆம் திகதி ஓய்வுபெறவுள்ள விமானப் படைத் தளபதி எயார் மார்ஷல் சுமங்கள டயஸ் நேற்று (வியாழக்கிழமை) ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவைச் சந்தித்தார்.

2019 மே மாதம் 29 ஆம் திகதி விமானப் படை தளபதியாக நியமிக்கப்பட்ட சுமங்கள டயஸ் இலங்கையின் 17 ஆவது விமானப் படைத் தளபதி ஆவார்.

முப்பது வருட பயங்கரவாதத்தை ஒழிப்பதற்கு பெரும் பங்காற்றிய அவர், தனது சேவைக் காலத்தில் வடமராட்சி நடவடிக்கை பதக்கம், பூர்ண பூமி சேவா பதக்கம், தேசபுத்ர விருது, ரணசூர விருது (மூன்று முறை), வடக்கு கிழக்கு நடவடிக்கைகள் பதக்கம், உத்தம சேவா பதக்கம், விசிஷ்ட சேவா விபூஷணய உள்ளிட்ட பல பதக்கங்களை வென்றுள்ளார்.

தாய்நாட்டுக்காக செய்த பணிகளைப் பாராட்டிய ஜனாதிபதி, சுமங்கள டயஸின் ஓய்வுகால வாழ்க்கை வெற்றிகரமாக அமைய வாழ்த்துக்களைத் தெரிவித்தார்.

## மேல்மாகாணத்தில் உள்ள பள்ளிவாசல்களுக்கு பூட்டு!


மேல் மாகாணத்திலுள்ள அனைத்து பள்ளிவாசல்களையும் மீள அறிவித்தல் வரை மூடுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

முஸ்லிம் கலாசார விவகார திணைக்களத்தால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சின் வழிகாட்டுதல்களுக்கு அமைய வக்பு சபையால் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் நிலைமை வழமைக்கு திரும்பும் போது மீள பள்ளிவாசல்களைத் திறப்பது தொடர்பில் அறிவுறுத்தல் விடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## நடுக்கடலில் இரு மீனவர்கள் மாயம் ஒருவரின் சடலம் கரை ஒதுங்கியது!



கொழும்பு, ஒக்.30

இலங்கையை சேர்ந்த இரண்டு மீனவர்கள் நடுக்கடலில் மாயமான சூழ்நிலையில், அவர்களை தேடும் நடவடிக்கையில் படையினர் மற்றும் மீனவர்கள் ஈடுபட்டிருந்தனர்.

இந்நிலையில் நேற்று (வியாழக்கிழமை) காலை, இராமேஸ்வரம் மீன்பிடி துறைமுகம் அருகே அடையாளம் தெரியாத ஆணொருவரின் சடலம் கரையொதுங்கி உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில், காணாமல்போயுள்ள மற்றைய மீனவரை தேடும் நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன எனக் கூறப்படுகின்றது.

## மீன், கருவாடு, நெத்தலி, மாசி ஆகியவற்றுக்கு வரி அதிகரிப்பு!

கொழும்பு, ஒக்.30

இறக்குமதி செய்யப்படும் மீன், கருவாடு, மாசி மற்றும் நெத்தலி போன்ற அத்தியாவசியப் பொருள்களுக்கான விசேட வியாபாரப்பண்ட வரி அதிகரிக்கப்பட்டுள்ளது.

மீன்பிடி அமைச்சால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சந்தையில் மீன் விற்பனை குறைந்துள்ள சூழலில், அவற்றைக் கருவாடாக்கும் நடவடிக்கைகளை, உள்ளூர் உற்பத்தியாளர்கள் மேற்கொண்டுவருகின்ற நிலையிலேயே, மேற்படி அத்தியாவசியப் பொருள்களுக்கான வரி அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, இறக்குமதி செய்யப்படும் ஒரு கிலோகிராம் கருவாட்டுக்கு 127 ரூபாயும், மாசி ஒரு கிலோகிராமுக்கு 302 ரூபாயும், நெத்திலி ஒரு கிலோ கிராமுக்கு ஒரு ரூபாய் என்ற அடிப்படையில், விசேட வியாபாரப் பண்டவரி அதிகரிக்கப்பட்டுள்ளது.

## மருந்துகளை விநியோகம் செய்யும்போது மருந்தக அனுமதியைப் பயன்படுத்தலாம்!

ஊரடங்கு காலப்பகுதியில் மருந்துகளை விநியோகிக்கும்போது, மருந்தகங்களுக்கு வழங்கப்பட்டுள்ள அனுமதிப் பத்திரத்தை ஊரடங்கு அனுமதியாகப் பயன்படுத்திக் கொள்ள முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையின் விசேட அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தனிமைப்படுத்தல் ஊரடங்கு அமுல்படுத்தப்படும் காலப்பகுதியில், தடையின்றி பொதுமக்களுக்கு மருந்துகளைப் பெற்றுக் கொடுக்கும் நோக்கில் இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன், இவ்வாறு வீடுகளுக்கு மருந்துகளை விநியோகிக்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்படும்போது, தனிமைப்படுத்தல் சுகாதார விதிமுறைகள் மற்றும் தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையின் வழிகாட்டல்கள் ஆகியவற்றுக்கு அமைய மருந்தக உரிமையாளர்கள் செயற்பட வேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

## வளி மாசு மட்டத்தின் அளவு அதிகரிப்பு!

நாட்டில் வளி மாசு மட்டத்தின் அளவு அசாதாரணமான முறையில் அதிகரித்துள்ளது.

தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனத்தால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு, கண்டி, புத்தளம், வவுனியா மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளில் கடந்த 27 ஆம் திகதி முதல் இவ்வாறு அசாதாரணமான முறையில் வளி மாசு அதிகரித்து வருவதாகக் குறிப்பிடப்படுகின்றது.

இந்திய துணைக் கண்டத்தின் மேல் வானத்தின் வளி மாசு எமது நாட்டின் வளிமண்டலத்திற்குள் நுழைவதாலேயே இவ்வாறு வளி மாசு அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

## பாடசாலைகளை மீளவும் ஆரம்பிப்பதற்காக சுகாதாரப் பரிந்துரைகள் கோரப்பட்டுள்ளன!

கொழும்பு, ஒக்.30

எதிர்வரும் நவம்பர் மாதம் 9 ஆம் திகதி பாடசாலைகளை மீண்டும் ஆரம்பிப்பது தொடர்பாகப் பரிசீலனை மேற்கொள்வதற்காக சுகாதார பரிந்துரைகள் கோரப்பட்டுள்ளன.

பாடசாலைகளை மீள ஆரம்பிப்பது தொடர்பான சுகாதார அணுகுமுறைகள் குறித்த எழுத்து மூல பரிந்துரைகளை சமர்ப்பிக்குமாறு கல்வி அமைச்சு, சுகாதார அமைச்சிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இதற்கிடையில் இணையவழிக் கற்பித்தல் தொடர்பான மேற்பார்வை ஒன்றைச் செய்தவதற்கு கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

அனைத்து மாணவர்களுக்கும் இணைய வசதி இன்மை காரணமாக இந்த மேற்பார்வையை மேற்கொள்ளத் தீர்மானித்துள்ளதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 30.10.2020 இல் வெளியிடப்பெற்றது.